ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# கண்மணி குணசேகரனின் சிறுகதைகளில் வெளிப்படும் தெருக்கூத்துக் கலை

**பி சிவராமலெட்சுமி[1] & முனைவர் மு.புஷ்பகவல்லி[2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர் & [2]உதவி பேராசிரியர்,**

**தமிழ்த்துறை, தமிழாய்வு மையம்,**

**ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி,**

**தூத்துக்குடி- 628 002.psivaramalakshmi@gmail.com**

4

**ஆய்வுச் சுருக்கம்**

கலைகளின் வழி மக்களுக்கு இலக்கியப் பதிவுகளையும் புராணக் கதைகளையும் கொண்டு சேர்க்கும் தளமே தெருக்கூத்து ஆகும். உண்மைதான் பேச வேண்டும் என்ற கொள்கை கொண்ட அரிச்சந்திரன் கதைகள் மகாபாரதக் கதைகள் போன்ற அறம் சார்ந்த கதைகளை மக்களுக்குக் கொண்டு செல்வது தெருக்கூத்தின் நோக்கமாகும். அத்தகைய தெருக்கூத்தில் பயன்படும் பொருள்கள் கலைஞர்களின் ஆடை அலங்காரம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்வதுடன் தெருக்கூத்து பொருள்களளின் மீது கலைஞர்களுக்கு இருக்கும் பக்தியை அறியலாம். கலைஞனின் மீதான மக்களின் ஆர்வத்தைத் தெரிந்து கொள்ளலாம். அதே நேரத்தில் கலைஞர்களின் குடும்பத்தின் மீதான மக்களின் பார்வையை விளக்குவதாகக் கண்மணி குணசேகரனின் சிறுகதைகள் அமைந்துள்ளன.

**திறவு சொல்:**

மத்தாளக்கட்டை, ஆர்மோனியப் பெட்டி, செந்தூரப் பவுடர், நகப்பட்டி.

**முன்னுரை:**

16 முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலங்களில் நெறிப்படுத்தப்பட்ட கோவில்களில் நடைபெறும் நடனம், நாடகம் என்ற கலைகள் ஒருபுறம் இருந்தாலும் பெரும்பாலான கிராமங்களில் ஆட்சி செலுத்தியவை நாட்டார் நிகழ்த்துக் கலைகளே. தமிழ்நாட்டார் அரங்கக்கலை மரபுகளில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒன்று தெருக்கூத்து ஆகும் தமிழகத்தின் மிகச்சிறந்த நாட்டார் கலையாகவும் தெருக்கூத்து விளங்குகிறது. மக்களின் முன்பு நிகழ்த்திக் காட்டுவதால் இதை நிகழ்த்துக் கலை என்றும் கூறுவர். தெருக்கூத்துக் கலைஞர்கள் கட்டை கட்டிக்கொண்டு ஆடுவதால் இதை 'கட்டைக்கூத்து' என்றும் கூறுவர். தெருக்கூத்தில் இசை, இசைக்கருவி, பாட்டு, ஆட்டம், நடிப்பு, பேச்சு, திரைச்சீலை, பாத்திரங்கள், உடை, ஒப்பனை, மேடை, குரல், ஒலி அமைப்பு, கதை அமைப்பு ஆகியவை சிறந்த கூறுகளாக உள்ளன. இதில் இசைக்கருவி, ஒப்பனை, பாட்டின் மெட்டு என்பதன் அடிப்படையில் வடக்கத்திய பாணி, தெற்கத்திய பாணி என்ற வகைப்பாடானது விளங்குகிறது. வடக்கத்திய பாணியை மையமாகக் கொண்ட தெருக்கூத்தானது விழுப்புரம், கடலூர், விருத்தாச்சலம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய நடுநாட்டு வட்டாரத்தில் நிகழ்த்தப்படுகிறது. அத்தகய தெருக்கூத்தினைப் பற்றியும் தெருக்கூத்தை நிகழ்த்தும் கலைஞர்களைப் பற்றியும் கண்மணி குணசேகரன் தனது சிறுகதையில் எவ்வாறு பதிவிட்டுள்ளார் என்பதை ஆய்ந்து அறிவதாக இக்கட்டுரையானது அமைந்துள்ளது.

**கூத்துக் கதைகள்:**

கூத்துக் கலையின் மூலம் மக்களுக்குப் புராணக் கதைகளும் இதிகாசக் கதைகளும் காப்பியக் கதைகளும் கொண்டு செல்லப்படுகின்றன.

"நாடகம் என்னும் ஓர் அழகிய உடம்புக்கு உயிர் போல்வது அதனோடு தொடர்ந்து நிகழுங்

கதையேயாகும்.” 1

‘ராசபாட்டை’ சிறுகதையில் “வாத்தியார் கர்ணன் தான் கட்டுவார் தலைப்பு வேஷம் துரியோதனன் எழவத்தடி கோபால்தான் வழக்கமாய்க் கட்டுவது”2 மகாபாரதக் கதையானது தெருக்கூத்தில் நாடகமாக நடிக்கப்பட்டதைக் காண முடிகிறது.

‘இடைவெளி’ சிறுகதையில் “செல்வராசு வாத்தியார் தான் மௌல் யாரு கட்டுனாறு எங்கு தூங்க விட்டாரு ஜனங்கள முதல்ல முனிவர் வேஷம் போட்டுக்கிட்டு போயி நலங்கிட்ட ”கேட்டதெல்லாம் கொடுக்கணும்னு” சொல்லி சத்தியத்தை வாங்கிட்டு “குட்றா ஒம் பொண்ண”ன்னு குதிச்ச குதி இருக்கே பதினாறு வயசு பையங் கெட்டான். சத்தியம் பண்ணதுக்கு அடயாளமா மோதிரத்தை வாங்கிட்டு நளாங்கன்னி கிட்டப் போயி வாலிபனா வேஷத்தை மாத்திக்கிட்டு கொஞ்சன கொஞ்சலு இருக்கே, ‘இவந்தான்டா வாத்தி’ன்னு பெரிய ஆளு எல்லாம் பேச ஆரம்பிச்சிட்டாங்க. நளாங்கண்ணிய கட்டிக்கிட்டப்புறம் மறுபடியும் முனிவரு வேஷம். அப்ப அவருக்கு குஷ்டம் புடிச்சிடற மாதிரி கத. வெரல மடக்கிக்கிட்டு உடம்பெல்லாம் திட்டுத்திட்டா செவப்பப் பூசிக்கிட்டு அப்படியே மாசி மகத்துல நிக்கிற மாதிரி ஈ ஓட்டறதும் நொண்டி நொண்டி நடக்கிறதும் பார்த்த சனம் ‘என்னாடா மனுஷனா இருப்பான் இவன்’ன்னு முட்டுமுட்டா பேச ஆரம்பிச்சுட்டதுவோ. நளாங்கன்னி கிட்டப் போயி “இன்னக்கி நானு தேவடியா கூட படுக்கணும். என்னத் தூக்கிக்கிட்டுப் போடி அவ வூட்டுக்கு”3 நளாங்கண்ணி கதையை நாடகமாகத் தெருக்கூத்தில் நடிப்பதன் மூலம் மக்களின் மனதில் கதையை ஆயுளுக்கும் மறக்காத வகையில் பதிவிட முடியும் என்பதை அறிய முடிகிறது.

தற்போது தேர்தல் காலத்தில் வாக்காளர் விழிப்புணர்வு தெருக்கூத்துகளும் சமூக விழிப்புணர்வு மற்றும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு தெருக்கூத்துகளும் நடைபெறுவதுடன் கொரோனா போன்ற நோய் தொற்று காலத்தில் நோய் பற்றிய விழிப்புணர்வையும் நோய் தடுக்கும் வழிகளையும் தெருக்கூத்தின் வழி மக்களிடம் கொண்டு செல்லப்படுகிறது.

**ஒப்பனைகளும் உபகரணங்களும்:**

நாடகத்தில் கதை மாந்தர்களுக்கு ஏற்ப ஒப்பனையும் ஆடை ஆபரணங்களும் அணிந்தால் மட்டுமே பார்ப்பவர் மனதில் உண்மையான காட்சியை ஆழமாகப் பதிவிட முடியும்.

“கூத்தில் வரும் கதாபாத்திரங்களின் பண்புகளை வண்ணங்களும் ஒப்பனையும் வெளிப்படுத்தும் ஒப்பனைக் குறிகளை அடையாளங்களாகக் கொண்டு அனுபவப்பட்ட பார்வையாளன் பாத்திரங்களைப் புரிந்து கொள்வான் வர்ணங்களுக்கும் பொருண்மையுண்டு.” 4

‘அம்போகம்’ சிறுகதையில் காசிலிங்கம் தெருக்கூத்து சமாவில் எடுபுடி வேலை செய்து வந்தான் வேசம் கட்டுகிற இடத்தில் ஆண் வேசக்காரர்களுக்கு இடுப்பில் சுற்ற மோதாகத் துணி முறுக்கித் தருவது, புடவை கொசுவி மடக்குவது, ஆடாமல் இறுக்கமாகக் கட்டி விடுவது போன்ற ஒப்பனை வேலைகளைச் செய்வான்.

“தூணில் கண்ணாடியை சாய்த்து ஆயிப்பேட்டை சண்முகம் பெருந்திருவாளாக பெண் வேஷம் கட்டிக் கொண்டிருந்தான் சொந்த முடி தான் அழகாய் வாக்கு எடுத்து சீவி முகத்தில் மெல்லிசாய் பவுடர் பூசி நெற்றியில் ஒட்டுப்போட்டு ஒத்தியபடி அண்டராயர் ரோடு குந்தியிருந்தான்.

சண்முகத்திற்கு ஒரு நாள் தாசி வேடம் மார்கள் ரொம்பவும் எடுப்பாய் இருக்க வேண்டும் காசி கூடுதலாய் வட்டு துணிகளை எடுத்து நன்றாகக் கட்டை விரல்களால் உள்ளே குவித்து குவித்து களிமண்ணால் செய்தது போன்று பெரிய கொட்டாஞ்சி அளவில் துணி முட்டனங்கள் அசக்குளையாது அப்படியே ஒவ்வொன்றாய் உள் பாடிக்குள் வைத்து பிதுங்களாய் தெரிந்ததை அமுக்கி சரி செய்து

நேருக்கு நேர் அழகான கூர்முனைகளைக் கொண்டதுகளைப் பார்த்தபோது காசிக்கு தன்னையும் அறியாமல் நினைப்பு சூரியகாந்தி மேல ஓடியது."[5]

கூத்துக் கலைஞர்கள் நாடகத்தின் கதாபாத்திரத்திற்குத் தகுந்தார் போல ஒப்பனை செய்து கொள்வதைப் பார்க்க முடிகிறது.

"டோலக் அல்லது மிருதங்கம், தாளம் எனப்படும் சால்ரா, சுதிப்பெட்டி அல்லது ஆர்மோனியம், முகவீணை அல்லது புல்லாங்குழல் ஆகியன தெருக்கூத்துக்குரிய இசைக்கருவிகள்".[6]

'ராசபாட்டை' சிறுகதையில் பேருந்துக்காகக் கூத்துக் குழுவினர் காத்திருந்தனர். "பார்க்க மனசு பதறுகிறது நகைப்பெட்டி, துணி மூட்டை, மத்தாளக்கட்டைகள், ஆர்மோனியப்பெட்டி எல்லாம் மொட்டை வெயிலில் கிடக்கின்றன. கண்ணன், துரியோதனன் இன்னும் பாஞ்சாலி, அல்லி தெய்வ வேடங்களுக்கான உடுப்புகள், ஆபரணங்கள். பெட்டியை எடுத்துப் போய் ஓரத்து வேப்பமரத்து நிழலில் வைத்தாலும் திடீரென எவனாவது நிறுத்தும்போது தூக்கிவர வேண்டியிருக்கிறது."[7] என்ற கதைப்பதிவின் மூலம் தெருக்கூத்துக்குத் தேவையான உபகரணங்களை உற்று நோக்க முடிகிறது.

**கலைஞர்கள் மீதான மரியாதை:**

நடிப்பின் மூலம் கதாபாத்திரத்தின் மறு வடிவாகக் கலைஞர்கள் மக்களின் பார்வையில் தெரிகின்றனர். அதனால், அவர்களை எங்கு பார்த்தாலும் மக்களின் மனதில் அவர்களின் மீதான மரியாதையும் கூடுகிறது.

ராசோக்கியம் செல்வராசுவின் கூத்து, பக்கத்து ஊர்ல எங்க நடந்தாலும் போகாமல் இருக்க மாட்டான். "வாத்தியாரு திரையை விட்டு வெளியே வந்ததும் பத்தோ அஞ்சோ கொடுப்பான். ஒவ்வொரு நாள்ல மாலை கட்டிக்கிட்டு போயி போட்டுட்டு சாமி வேஷமா இருந்தா கால தொட்டு கும்பிட்டு வருவான்."[8] என்ற இடைவெளி சிறுகதையின் மூலம் கலைஞர்கள் மீதும் கலை மீதும் மக்களுக்கு இருந்த மரியாதையைக் காண முடிகிறது.

**கலைஞர்களின் குடும்பத்தின் மீதான பார்வை:**

வேடங்களில் மட்டும் ராசாவாக வரும் கலைஞர்களின் நிஜ வாழ்க்கையில் மரியாதைக் குறைவாகப் பார்க்கப்படும் குடும்ப வாழ்க்கையையே வாழ்கின்றனர். ராசோக்கியமும் அவன் நண்பனும் கூத்திருக்கு முன்பணம் வைக்கச் செல்வராசு வீட்டிற்குச் சென்றிருந்தனர். அப்போது செல்வராசுவின் மனைவி, "இங்க ஒன்னு நின்னுத தலை சீவிக்கிட்டு அதுதான் நடுவுளது அதுதாங்க எப்படி ஒப்பேறும்னு தெரியல. ஒரு தடவை ரெண்டு தடவை இல்லைங்க நாலஞ்சு தடவை கல்யாணத்துக்கு ஏற்பாடாயி நின்னு போச்சுங்க". திரும்பி வரும்போது, "செல்வராசுவின் மகளை ராசோக்கியத்தின் நண்பன் உற்றுப் பார்க்கிறான்.

"எதேச்சியா திரும்பிப் பார்த்த ராசோக்கியம் பதட்டமா கேட்டான் ஏன்டா நிக்கிற?"

"இல்ல அந்த தல சீவிக்கிட்டு இருந்ததே அந்த பொண்ணு......" இழுத்தான் ராசோக்கியத்தின் நண்பன். "அந்தப் பொண்ணுக்கு என்ன கட்டிக்கவா போற?."

"ஏன் கட்டி கிட்ட ஆவாத?" நான் இப்படி பட்டுனு பதில் சொன்னதும் வேகமாக திரும்பினான் "ஏன்டா நீ படிச்சிருக்கியே தவிர அறிவு இல்லடா உனக்கு போயும் போயும் கூத்தாடி மவளே எவன்டா கட்டுவான்? ஆளு கூத்தாட போனான்னா நாலு கணக்குல தங்கிடுகிறான் இப்ப அந்த பொம்பள சொல்லல போய் மூணு நாள் ஆகுதுன்னு ஆள் இல்லாத ஊடு வயசு புள்ளைவோ பொம்பளையும்

நடுத்தர வயசு ஆளும் ஆலுமா இருக்கிறப்பவே அதாகுதம் நடந்து போகுது இந்த காலத்தில் எது எப்படி இருக்கும் என்று எவன் கண்டான்?"

ஒப்புக்குத்தான் கட்டிக்கிட்டா ஆகாதா? ன்னு சொன்னேன் கடைசி வெட்டுக்குச் சாய்ற மரம் மாதிரி வார்த்தைவுள மளமளன்னு சாய்ச்சிட்டு "வாடா.....சீக்கிரம்"னு சொல்லிகிட்டே சர்வ சாதாரணமா சிரிச்சபடி போய்க்கிட்டு இருந்தான் ராசோக்கியம்.

'சின்னக்குப்பம்'செல்வராசு'ன்னா உயிரா மதிச்சி மரியாத காட்ற ராசோக்கியமா இப்பிடிப் பேசுறது! எந்த ஊர்ல கூத்து நடந்தாலும் செல்ராசு ஆடறாருன்னா பசங்க கூட போயி அஞ்சோ பத்தோ கொடுத்து வாழ்த்தச் சொல்லும் ராசோக்கியமா இப்படி தப்புக்கணக்கு போடறான்!

ராசோக்கியம் பேசல. ஒலகம் பேசுது. அவனோட ஆட்டத்த பாட்ட ரசிக்கிற சனம் அவனோட சொந்த வாழ்க்கையை சந்தேகக் கண்ணோட பாக்குது"[9]

என்ற இடைவெளி சிறுகதையின் மூலம் கலைஞர்களின் மீது அளவு கடந்த மரியாதை வைத்து இருப்பவர்களும் அவர்களுடைய குடும்பத்தை மோசமான சந்தேகப் பார்வை கொண்டே பார்க்கிறார்கள் என்பதை கவனிக்க முடிகிறது. இந்த நிலை மாற வேண்டும் என்பதே ஆசிரியரின் விருப்பமாக உள்ளதை அறிய முடிகிறது.

குறைவான வருமானத்தினால் தன் பொருளாதார தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத போதும் தனது மகள்களைத் திருமணம் செய்து வைக்க தவிக்கின்ற போதும் கூட பாரம்பரிய கலையான தெருக்கூத்து அழிந்து விடக்கூடாது என்பதற்காகத் தன் வாழ்க்கையை முழுவதுமாக அர்பணித்துக் கொள்ளும் கலைஞர்களை உற்று நோக்க முடிகிறது.

**செய்யும் தொழிலே தெய்வம்:**

செய்யும் தொழிலையும் தொழிலுக்கு உதவியாக இருக்கும் பொருள்களையும் தெய்வமாக் கருதுவது ஒவ்வொரு தொழிலாளியின் ஆத்ம வெளிப்பாடாகும்.

ராசபாட்டை சிறுகதையில் வெகு நேரம் கழித்து வந்த பேருந்தில் கூத்துக்குத் தேவையான பொருள்களை ஏற்றும் பொழுது படியின் மேல் இருந்தவன் அதனை எட்டி உதைக்கின்றான். "யோவ் உங்களுக்கு ஒரு தடவ சொன்னா உரைக்காது எட்டு நவுத்தியா மேல நின்றவன் பட்டு என்று காலால் உதைத்து நெட்டி நகைப்பெட்டியை வெளியே தள்ளினான். சுதாரித்துப் பிடிப்பதற்குள் அடுத்தடுத்து படியாய் 'திட் திட்' என்று இறங்கியது நகைப்பெட்டி வாத்தியாருக்கு நெஞ்சில் திடீர் திடீர் என்று இடியாய் இறங்குகிறது. தரையில் வந்து விழுவதற்குள், ஓடி அவனுடன் சேர்ந்து நகைப்பெட்டியை வாரி எடுத்து அணைத்துக் கொண்டு கலங்குகிறார் கதறுகிறார்.

நாம கையால தொட்டுக் கும்புடுற தெய்வத்தைப் போயி அவன் காலால தள்ளிட்டுப் போறாம்பா. நம்ப சாமிய காலால ஒதைச்சி தள்ளிட்டுப் போறாம்பா. நமக்கு சோறு போடற தெய்வத்த காலால ஒதைச்சி நெட்டித் தள்ளிட்டு போறாம்பா…"[10]

என்று வாத்தியார் கதறி கதறி அழுவதில் இருந்து தொழில் சார்ந்த பொருள்களின் மீது அவர்கள் வைத்துள்ள மரியாதையைக் காண முடிகிறது. 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற பழமொழிக்கு ஏற்ப கூத்துக்குத் தேவையான பொருட்களைக் கலைஞர்கள் தெய்வமாகக் காண்பதை உற்று நோக்க முடிகிறது.

**முடிவுரை**:

தெருக்கூத்தின் வழி தமிழ் இலக்கியங்களைப் பற்றியும் கூத்துக் கலைக்குத் தேவையான பொருள்கள் பற்றியும் ஒப்பனை செய்யும் முறைகளையும் தெரிந்து கொள்வதுடன் கலைஞர்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையையும் கலைஞர்களின் குடும்பத்தின் மீதான நம்பிக்கையான

பார்வையையும் அதிகரிக்க வேண்டும் என்பதை கண்மணி குணசேகரனின் சிறுகதைகளின் வழி உணர முடிகிறது.

**மேற்கோள்கள்:**

1. சுவாமி வேதாசலம், சாகுந்தல நாடக ஆராய்ச்சி ப.26.
2. கண்மணி குணசேகரன், ராசபாட்டை சிறுகதை ப.95.
3. கண்மணி குணசேகரன் இடைவெளி சிறுகதை ப.40.
4. தே.லார்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள் ப.292.
5. கண்மணி குணசேகரன் அம்போகம் சிறுகதை ப. 6
6. அ.கா.பெருமாள், தமிழர் கலையும் பண்பாடும் ப.55.
7. கண்மணி குணசேகரன் ராசபாட்டை சிறுகதை ப.95.
8. கண்மணி குணசேகரன் இடைவெளி சிறுகதை ப.40
9. மேலது
10. கண்மணி குணசேகரன் ராசா பாட்டை சிறுகதை ப.95.

**துணைநூல் பட்டியல்:**


1. சுவாமி வேதாசலம், சாகுந்தல நாடக ஆராய்ச்சி, T.M.PRESS.(1934).
2. கண்மணி குணசேகரன், ஆதண்டார் கோயில் குதிரை சிறுகதைத்தொகுப்பு, தமிழினி பதிப்பகம், 63, நாச்சியம்மை நகர், சேலவாயல், சென்னை 51.(2019).
3. கண்மணி குணசேகரன், உயிர்த்தண்ணீர் சிறுகதைத்தொகுப்பு, தமிழினி பதிப்பகம், 63, நாச்சியம்மை நகர், சேலவாயல், சென்னை 51.(2019).
4. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை 6 2 7 007. (2000)
5. கண்மணி குணசேகரன், வாடாமல்லி சிறுகதைத்தொகுப்பு, தமிழினி பதிப்பகம், 63, நாச்சியம்மை நகர், சேலவாயல், சென்னை 51.(2019).
6. அ. கா. பெருமாள். தமிழர் கலையும் பண்பாடும், பாவை பப்ளிகேஷன், 142 ஜானி ஜான்சாலை, இராயப்பேட்டை சென்னை 600 014.